NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 6 July 2017

முதலாவது ஆசிய பசிபிக் பல்கலைக்கழகத் தரவரிசை வெளியீடு

# ‘என்யுஎஸ்’ முதலிடம்

‘டைம்ஸ்’ உயர்கல்வி சஞ்சிகையின் முதல் ஆசிய பசிபிக் பல்கலைக்கழக தரவரிசையில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம் முதலிடம் பெற்றுள்ளது.

நன்யாங் தொழில்நுட்பப் பல் கலைக்கழகம் ஐந்தாம் இடத்தில் உள்ளது.

பீக்கிங் பல்கலைக்கழகம் 2ஆம் நிலையிலும் மெல்பர்ன், சிங்ஹுவா பல்கலைக்கழகங்கள் முறையே அடுத்த இரண்டு நிலைகளிலும் வந்தன.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகம் ஆய்வு, கற்றல் சூழல், அனைத்துலகக் கண்ணோட்டம் ஆகியவற்றில் வலுவாக இருப்பதாகவும் நன்யாங் பல்கலைக்கழகம் ஆய்வுப் பலனில் உன்னத நிலையில் இருப்பதாகவும் சஞ்சிகையின் தரவரிசை தொகுப்பாசிரியர் திரு ஃபில் பேட்டி கூறினார்.

ஆய்வுப் பலனை மட்டும் அடிப்படையாகக் கொண்டால் நன்யாங் பல்கலைக்கழகம் மூன்றாம் நிலையில் இருக்கும் என்றார் அவர்.

“தரவரிசைக்குப் பயன்படுத்தப்பட்ட ஐந்து அடிப்படைக் கூறுகளிலும் சிங்கப்பூர் வலுவாக இருப்பதைக் காணும்போது எதிர்வரும் ஆண்டுகளில் இந்நாடு பட்டியலில் தொடர்ந்து முன்னேறும் எனத் தோன்றுகிறது,” என்றார் அவர்.

ஆசிய பசிபிக்கின் தலைசிறந்த பல்கலைக்கழகமாகத் தேசிய பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றிருப்பது பெருமகிழ்ச்சி அளிப்பதாக அப்பல்கலைக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் டான் சோர் சுவான் கூறினார்.

“பலதரப்பட்ட துறைகளில் பரந்த அடிப்படையிலான உன்னதத்தை நாடிச் செயல்படும் எங்களது தொலைநோக்கையும் நீண்டகால உத்தியையும் இந்தப் பாராட்டு வலுவாக உறுதிப்படுத்துகிறது,” என்றார் அவர்.

“ஆசிய பசிபிக் வட்டாரத்தில் உயர்கல்வியும் ஆய்வும் செழிப்பான வளர்ச்சி அடைந்து வருகின்றன. தேசிய பல்கலைக்கழகம் உட்பட, இப்பகுதியில் இருக்கும் பல்கலைக்கழகங்கள், துடிப்புமிக்க இந்த வட்டாரத்தின் உருமாற்றத்திலும் எதிர்நோக்கும் சவால்களை, வாய்ப்புகளைக் கையாளுவதிலும் முக்கிய பங்காற்றவுள்ளன,” என்றும் அவர் கூறினார்.

சிங்கப்பூரில் தலைசிறந்த இரு பல்கலைக்கழகங்கள் இருப்பதில் சிங்கப்பூரர்கள் பெருமைப்பட வேண்டும் என்றார் நன்யாங் பல்கலைக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் பெர்டில் ஆண்டர்சன்.

“உலகத் தரமிக்க கல்விக்கும் ஆய்வின் உன்னதத்திற்கும் உகந்த சூழலை என்டியுவில் நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். சிங்கப்பூருக்கும் உலகுக்கும் மதிப்பு சேர்க்கும் வகையில் கல்வி, ஆய்வு, தொழில்துறைக் கூட்டுத் திட்டங்கள் ஆகியவற்றில் எங்களது பலத்தை நாங்கள் தொடர்ந்து வலுப்படுத்துவோம்,” என்றும் அவர் குறிப்பிட்டார்.

‘டைம்ஸ்’ உயர்கல்வி சஞ்சிகையின் புதிய தரவரிசையில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து உட்பட ஆசிய பசிபிக் வட்டாரத்திலுள்ள 243 பல்கலைக்கழகங்கள் மதிப்பிடப்பட்டன.

உலகப் பல்கலைக்கழகத் தரவரிசைக்குப் பயன்படுத்தப்படும் அதே 13 செயலாற்றல் குறியீடுகள் இந்தத் தரவரிசைக்கும் பயன்படுத்தப்பட்டன. ஆனால், இவ்வட்டாரப் பல்கலைக்கழகங்களின் தனிப்பட்ட இயல்புக்கு ஏற்ப சிறப்பு மாற்றங்கள் செய்யப்பட்டன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.